பொய் வழக்குகளைக் கழகம் எதிர்கொண்டு பொடிப் பொடியாக்கும்!

இனி வரவிருக்கும் இடைத்தேர்தல் களங்களுக்கு உடன்பிறப்புகள் ஆயத்தமாக வேண்டும் எனக் கழகத் தலைவர் அறிவிப்பு வெளியிடுகிறார். தலைவரின் அறிவிப்பு வெளியான வேகத்தில் த.வெ.க. அரசு பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாகி விட்டது.

இடைத்தேர்தல் நடைபெறவிருக்கும் தொகுதிகளில் ஒன்று, திருச்சி கிழக்கு. அது கழகத்தின் வலிமையைப் பல முறை பறை சாற்றிய தொகுதி. தி.மு.க.வின் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குள் அடங்கியுள்ள தொகுதி. அதன் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள். த.வெ.க அரசு பழிவாங்கும் நோக்கத்துடன் அவசர அவசரமாக அவரைக் கைது செய்திருக்கிறது. தி.மு.க இப்படிப் பழிவாங்கும் வழக்குகளை எதிர்கொள்வது புதிதல்ல. எம்.ஜி.ஆர்ஜெயலலிதா ஆட்சிக்காலங்களில் அ.தி.மு.க என்ன செய்ததோ, அதைத்தான் விஜய் தலைமையிலான த.வெ.க அரசும் செய்கிறது.

மதுராந்தகம், தாராபுரம் இரண்டு தொகுதிகளின் இடைத்தேர்தல்களிலும் தி.மு.க.வின் வாக்கு வங்கி வலுவாக இருப்பது நீரூபணமாகிவிட்டது. த.வெ.க.வுக்கு நேரடிமறைமுகக் கூட்டணிக் கட்சிகள் இருந்தும், பணத்தை வாரி இறைத்தும், ஆளுங்கட்சி என்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தியும், கடைசி அஸ்திரமாக இடைத்தேர்தல் களத்தில் இதுவரை எந்த முதலமைச்சரும் பிரச்சாரம் செய்யாத அளவுக்கு விஜய் தெருத் தெருவாகச் சுற்றியும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கான செல்வாக்குடன் த.வெ.க.வால் வெற்றி பெற முடியவில்லை. இரண்டு தொகுதிகளை இத்தனை படைபலத்துடன்தான் வெற்றி கொள்ள முடிந்தது.

திருச்சி கிழக்கு என்பது விஜய் ராஜினாமா செய்த தொகுதி. இரண்டு தொகுதியில் வெற்றி பெற்ற அவர், ஏன் தங்கள் தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கேள்வி திருச்சி கிழக்குத் தொகுதியில் விசிலுக்கு வாக்களித்தவர்களின் மனநிலையாக உள்ளது. கடந்த 5 மாதகால த.வெ.க ஆட்சியையும், கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியையும் திருச்சி கிழக்கு வாக்காளர்கள் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கண்மூடித் தனமான கவர்ச்சியால் எத்தகைய சிறப்பான ஆட்சியைப் பறிகொடுத்திருக்கிறோம் என்ற வருத்தமும் அவர்களிடம் உள்ளது.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளை விடவும் திருச்சி கிழக்கில் த.வெ.க தனது அதிகார பலத்தைக் கொண்டு மொத்த வித்தையையும் இறக்கினாலும் தி.மு.க.வை நேர்மையாக எதிர்கொள்வது சிரமம் என்பதால், 'மகாபாரத' வியூகத்தை விஜய் தரப்பு மேற்கொண்டுள்ளது. பா.ஜ.கஆர்.எஸ்.எஸ். பெற்றெடுத்த பிள்ளைதான் த.வெ.க என்று தற்போது அதனுடன் கூட்டணியில் உள்ள கட்சி ஏற்கனவே விமர்சித்திருந்தது அல்லவா? அதனை நினைவூட்டிக் கொண்டால், பா.ஜ.கஆர்.எஸ்.எஸ். நட்பின் விளைவாக த.வெ.க கையாளும் மகாபாரத சூழ்ச்சி வியூகம் புரியும்.

குருஷேத்திரப் போரில் துரியோதனாதிகளின் கௌரவப் படையை, தர்மரின் பாண்டவர் படை எதிர்கொள்கிறது. கௌரவர்கள் படையில், செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதற்காக கர்ணன் இருக்கிறார். கர்ணனை வெல்வது அத்தனை எளிதல்ல. பாண்டவர்கள் படையில் சகல வித்தைகளையும் அறிந்த அர்ஜூனனுக்கு எதிர்ப்புறத்தில் கர்ணன்தான் பெரும் சவால். அதனால் பாண்டவர்கள் பக்கம் நிற்கக்கூடிய பகவான் கிருஷ்ணர் ஒரு வழி செய்கிறார். கர்ணனின் உடலுடன் ஒட்டியிருக்கும் கவசகுண்டலங்கள் பெரும் பாதுகாப்பானவையாக உள்ளன. அதனால், அந்த கவசகுண்டலங்களைப் பறித்துவிட வேண்டும் என்பதுதான் சூழ்ச்சி. அந்த சூழ்ச்சி நடந்தேறுகிறது. போரில் கர்ணன் பங்கேற்கும்போது அந்தக் கவச குண்டலங்கள் இல்லை. கர்ணனை அர்ஜூனன் வீழ்த்துவதற்கு வசதியாகி விடுகிறது.

திருச்சிகிழக்குதொகுதியில்தி.மு.க.வுடன் இரத்தமும் சதையுமாக ஒட்டியிருக்கும் உடன்பிறப்புகளின் கவச குண்டலங்களாக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்களும், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் இருக்கிறார்கள். அன்பில் மகேஸ் மீது குற்றச்சாட்டு சுமத்தி, பழிவாங்கும் நடவடிக்கையாக கைதுப் படலத்தை அரங்கேற்றியிருக்கிறது த.வெ.க அரசு. முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு மீது வழக்குத் தொடர நீதிமன்றம் அனுமதி என்ற செய்தியும் அதே நாளில் வெளியாகிறது. இதுதான் 'மகாபாரத' சூழ்ச்சி.



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

திராவிட முன்னேற்றக் கழகம் இதுபோன்ற பல சூழ்ச்சிகளை எதிர்கொண்டு நிமிர்ந்து நிற்கும் இயக்கம். த.வெ.க.வின் விஜய் உள்ளிட்ட அவருடைய கட்சி நிர்வாகிகளின் 'கரூர் ஓட்டம்' போல தொடைநடுங்கிகள் அல்ல. தி.மு.க.வின் உடன்பிறப்புகள் துணிந்து நிற்கும் மன வலிமை கொண்டவர்கள். கழகத் தலைவர் திராவிட நாயகரின் கட்டளையை ஏற்று, களம் கண்டு, வெற்றிக்காக அயராது உழைப்பார்கள்.

த.வெ.க ஆட்சி அமைந்ததிலிருந்து அன்றாட வானிலை அறிக்கை போல, கொலைகள், கொள்ளைகள், பாலியல் குற்றங்கள், போதைப் பொருள் கடத்தல்கள் என அத்தனை கிரிமினல்தனங்களும் நடைபெறுகின்றன. நாளுக்கு நாள் இவை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. பாலியல் புகார்களில் த.வெ.க. நிர்வாகிகளே ஈடுபட்டிருப்பது புகார்களாக அம்பலமாகின்றன.

மாவட்டஒன்றிய அளவிலான நிர்வாகிகளாக இருந்தால் அரசாங்கமே அவர்களைப் பாதுகாக்கிறது. திருவைகுண்டம், இராணிப்பேட்டை, அரக்கோணம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த த.வெ.க. பெண்களே புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. வட்ட அளவிலும், கிளை அளவிலும் பாலியல் புகார்களில் ஈடுபடும் த.வெ.க.வினர் கைது செய்யப்படுகிறார்கள். அவர்களைக் கைது செய்தது ஊருக்கே தெரிந்துவிட்டபிறகுதான், அவர்கள் த.வெ.க.வில் இருப்பது தெரியவருகிறது. அதனால் மறைக்க முடியாமல் திணறுகிறது விஜய்யின் அதிகாரத்திற்குள் இருக்கும் காவல்துறை.

மெத் எனும் போதை கடத்தலில் சர்வதேச அளவில் ஈடுபட்டிருந்த நாகப்பட்டினம் மாவட்ட த.வெ.க நிர்வாகியை ஒன்றிய அரசின் வருவாய்ப் பிரிவு கைது செய்திருக்கிறது. உள்ளூர் போதை வியாபாரிகளான த.வெ.க நிர்வாகிகளைப் போலீஸ் பாதுகாக்கிறது.

திண்டிவனம் அருகே செஞ்சியில் 7 வயது சிறுமி காணாமல் போய் இரண்டு வாரங்களாகியும் போலீசால் 'துப்பு'த் துலக்க முடியவில்லை. மதுராந்தகத்தில் இளம் பெண் கொலை செய்யப்பட்டு தண்ணீரில் மிதக்கிறார். வடசென்னையில் ஒரு வயது குழந்தை பாலியல் கொடூரத்திற்குள்ளாகி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அல்லாடுகிறது. சாத்தான்குளத்தில் தாயைக் கொலை செய்து விட்டு, தந்தையையும் கொடூரமாகத் தாக்கி விட்டு பெண் பிள்ளைகளைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். ஈரோட்டில் பள்ளியில் விட்ட பெண்பிள்ளை வகுப்பறைக்குச் செல்வதற்கு முன்பே மாயமாகியிருக்கிறது. ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டில் 'திக்..திக்..' பயங்கரங்கள் அரங்கேறியபடியே இருக்கின்றன. சட்டம்ஒழுங்கு சீரழிந்து கிடக்கிறது.

இந்த அவலங்களைக் கண்டித்து கழக மகளிரணி சார்பில் அக்டோபர் 31அன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிப்பு வெளியான நிலையில், அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது என்ற செய்தி ஊடகங்களில் வெளியாகிறது. அவர் மீது சுமத்தப்படவை குற்றச்சாட்டுகள். நீதிமன்றத்தில் அவற்றை எதிர்கொண்டு அவர் வெளியே வருவார். தமிழ்நாட்டில் அன்றாடம் நடந்து கொண்டிருப்பவை கொடூரக் குற்றங்கள். அதில் பலவற்றில் த.வெ.க.வினரே தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். எந்த நடவடிக்கையுமில்லை.

திட்டமிட்டுப் பழிவாங்கும் நோக்கில் தி.மு.க.வினர் மீது போடப்பட்ட பொய் வழக்குகள் அனைத்திலும் கழகம் வெற்றி கண்டுள்ளது. ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க ஆட்சியில் கழகத்தினரைப் பழிவாங்குவதற்காகவே நில அபகரிப்பு சட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து, கழக நிர்வாகிகளைக் கைது செய்து சிறையில் அடைத்து, சிலர் மீது குண்டாஸ் பிரிவிலும் வழக்குப் போடப்பட்டது.

கழகத்தின் இன்றைய தலைவர் நம் திராவிட நாயகர் அவர்கள் மீது பொய்யான வகையில் நில அபகரிப்பு புகாரைக் கிளப்பியபோது, அவரே நேரில் டி.ஜி.பி. அலுவலகத்திற்குச் சென்றார். வழக்கு விவரங்களைக் கேட்கவும், தன் சார்பிலான மனுக்களை அளிக்கவும் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அங்கு சென்றபோது உயரதிகாரிகள் பின்வாசல் வழியே ஓட்டமெடுத்தனர். காரணம், ஆளபவர்களின் உத்தரவின்படி அவர்கள் பரப்பிய பொய்களுக்கு எந்த ஆதாரமுமில்லை. இறுதியில், ஜெயலலிதா ஆட்சியின் அவசரக் கோல நில அபகரிப்புச் சட்டம் தான் ரத்தானது. கழகத்தினர் மீது போடப்பட்டவை பொய் வழக்குகள் என்பது சட்டப்பூர்வமாக உறுதியானது.

பழிவாங்கும் நோக்கில் போடப்படும் பொய் வழக்குகளை டெல்லி வரை எதிர்கொண்டு தகத்தகாய சூரியனாக வெளிவந்தவர்கள் கழகத்தினர். த.வெ.க. ஆட்சியின் சீரழிவுகளையும், பெண்களுக்கு வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பு இல்லாத நிலையையும், மின்சாரம் முதல் மாணவர்களுக்கான சைக்கிள் வரை அனைத்திலும் நடைபெறும் ஊழல்களையும் களத்தில் நின்று கழகம் அம்பலப்படுத்தும். பொய் வழக்குகளைப் பொடிப் பொடியாக்கும்.

நிர்வாகத் திறமையற்ற த.வெ.க. அரசின்

சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து மகளிர் அணி சார்பில் கரூரில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி வேண்டுகோள்!

கரூர்.அக்.29-

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மகளிர் அணிசார்பில், சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து கரூரில் 31ஆம் தேதி சனிக்கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.



இதுகுறித்து கரூர் மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான வி.செந்தில் பாலாஜி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதா வது.:

தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு சீர்கேடு போதைப் பொருள் புழக்கம், கொலை, கொள்ளை, கண்டித்து தலைவர், தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, வரும் அக்டோபர் 31-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி கரூர் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கரூர் உழவர் சந்தை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள் கூட முழுமையாக நிறைவடையாத நிலையில் தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு பெண்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

தமிழ்நாட்டின்பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் கொலைகள் தாக்குதல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் பொது மக்களிடையே கவலையை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றவாளிகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் அரசு தவறிவிட்டது.

கழகத் தலைவர் தளபதி அவர்கள் சுட்டிக் காட்டியது போல் பெண்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட தாகக் கூறப்படும் 'சிங்கப் பெண்' சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. குற்றங்களைத் தடுப்பதில் காவல்துறையின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டிய நிலையில் அரசின்செயல்பாடுகளை விமர்சிக்கும் தி.மு.க. தோழர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது கைது நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுதான். இந்த நிர்வாக திறமையற்ற சோபாமாடல் அரசின் வேலையாக உள்ளது.

தமிழ்நாட்டில் த.வெ.க. பொறுப்பேற்றது முதல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாகப் பொது மக்களிடையே அதிர்ச்சி நிலவுகிறது.

அரிசி பருப்பு வகைகள்,சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலைஉயர்வு நியாய விலைக் கடைகளில் பொருட்கள் தட்டுப்பாடு காய்கறிகள் மற்றும் அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலையேற்றம் ஆகியவை ஏழை எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கின்றன. பால் விலை உயர்வு, அரிசி, பருப்பு, எண்ணெய், அத்தியாவசிய உணவு பண்டங்களின் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

மின் கட்டண உயர்வு அறிவிக்கப்படாத மின்வெட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. வீடுகள் சிறு-குறு தொழில்நிறுவனங்கள், வணிகர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒருபுறம் மின்கட்டணச் சுமையும், மறுபுறம் மின்வெட்டினாலும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

பெண்களின் பாதுகாப்பு சட்டம்-ஒழுங்கு போதைப் பொருள் ஒழிப்பு விலைவாசி கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் சட்ட ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து மகளிர் அணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள். பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, மாநகர, பகுதி, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகி கள், மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், சட்டமன்ற முன்னாள்,இந்நாள் உறுப்பினர்கள், கழக முன்னணியினர், மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கரூர் உழவர் சந்தை அருகே நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி குறிப்பிட்டுள்ளார்.

நாகையில் மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில்

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!

நாகை. அக்.29-

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க நாகையில் மகளிர் அணி சார்பில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து நாகையில் வரும் 31ஆம் தேதி சனிக்கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். இதுகுறித்து நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.



தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் புழக்கம், கொலை, கொள்ளை கண்டித்து தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்பின்படி, வரும் அக்டோபர் 31-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது

அதன்படி நாகை. மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில், அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நாகையில் புதிய பேருந்து நிலையம் அருகே அவுரி திடலில் , மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள்கூட முழுமையாக நிறைவடையாத நிலையில், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

பெண்களும் சிறுமிகளும் அச்சமின்றி வாழ்வதற்கான பாது காப்பான சூழலை உருவாக்குவது எந்தவொரு அரசின் அடிப்படைக் கடமையாகும். ஆனால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள், தாக்குதல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் பொது மக்களிடையே கவலையை ஏற்படுத்து கின்றன. இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும், பாதிக்கப்பட்ட வர்களுக்கு நீதி கிடைக்க வும், குற்றவாளிகள் மீது சட்டப்படி உரிய நட வடிக்கை எடுக்க அரசு தவறிவிட்டது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல், பெண்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட தாகக் கூறப்படும் 'சிங்கப் பெண்'சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. குற்றங்களைத் தடுப்பதில் காவல்துறையின் செயல்பாடுகள் வலுப் படுத்தப்பட வேண்டிய நிலையில், அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் தி.மு.க. தோழர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது கைது நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவது தான். இந்த நிர்வாக திறமையற்ற சோபா மாடல் அரசின் வேலையாக உள்ளது

பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், சட்டம்-ஒழுங்கைப் பேணுவதிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதே கழகத்தின் வலியுறுத்தலாகும்.

தமிழ்நாட்டில் த.வெ.க. பொறுப்பேற்று முதல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாகப் பொது மக்களிடையே கவலைகள் எழுந்துள்ளன. அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு, நியாய விலைக் கடைகளில் பொருட்கள் தட்டுப்பாடு, காய்கறிகள் மற்றும் அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலை யேற்றம் ஆகியவை ஏழை, எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கின்றன. பால் விலை உயர்வு, அரிசி, பருப்பு, எண்ணெய், பால் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது., மின் கட்டண உயர்வு, அறிவிக்கப்படாத மின்வெட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்து கின்றன. வீடுகள், சிறு-குறு தொழில்நிறுவனங்கள், வணிகர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒருபுறம் மின்கட்டணச் சுமையும்,, மறுபுறம் மின்வெட்பாலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது.

பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு, போதைப் பொருள் ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் சட்ட ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து நாகையில் மகளிர் அணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர் மன்ற, பேரூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நாகையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.